அடையாள இலக்கம்:

C

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2021

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்

Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

# மேற் பிரிவு

(10 – 11 வயதுப் பிரிவு)

நேரம்: 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

**(அ) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.** (புள்ளிகள்: 5)

1. பொற்காப்பு ____________ + ____________
2. பூந்தோட்டம் ____________ + ____________
3. ஏழெட்டு ____________ + ____________
4. மக்கட்பேறு ____________ + ____________
5. மனந்தளராமல் ____________ + ____________

**(ஆ) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.** (புள்ளிகள்: 5)

1. ஆறு + மணல் = ____________
2. வடக்கு + கிழக்கு = ____________
3. தமிழ் + இலக்கியம் = ____________
4. முரடு + மனிதன் = ____________
5. தேடி + சென்றான் = ____________

**(இ) பின்வரும் சொற்களுக்கு எதிர்ப் பொருள் கொண்ட சொற்களை எழுதுக.**
(புள்ளிகள்: 5)

1) அதிகவிலை ____________
2) வெளியே ____________
3) சிறுபான்மை ____________
4) குனிந்து ____________
5) ஞாபகம் ____________

**(ஈ) பின்வரும் சொற்களின் உயர்திணைப் பெண்பாற் சொற்களை எழுதுக.**

(புள்ளிகள்: 5)

1) தமிழன் ____________
2) நல்லவன் ____________
3) வீராங்கனை ____________
4) தோட்டக்காரன் ____________
5) பணக்காரன் ____________

**(உ) அடைப்புக் குறிக்குள் இருந்து பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்துக் கீழே தரப்பட்ட வசனங்களிற் காணப்படும் கோடிட்ட இடங்களை நிரப்புக.**

**குறிப்பு** : சரியான விடையினைக் கோடிட்ட இடத்தில் எழுதாதவர்களுக்குப் புள்ளிகள் **வழங்கப்படமாட்டாது.**

(புள்ளிகள்: 10)

1. மல்லிகை மலரின் ______________ அனைவரையும் கவர்ந்தது. (மனம், மணம்)
2. வாழைப்பழத்தின் ______________ உரித்து உண்ண வேண்டும். (தோழை, தோலை)
3. இந்த வருட விளையாட்டுப் போட்டியில் ______________ . பாடசாலைகளும் கலந்து கொண்டன. (அனைத்து, அணைத்து)
4. ______________ செய்த இளைஞர்களை காவலர்கள் கைது செய்தனர். (கலகம் களகம்)
5. எனது இடது ______________ தூசி விழுந்ததால் கண்ணீர் வருகிறது. (விழியில், விழியில்)
6. மணமக்கள் தம் பெற்றோர்களின் ______________ வணங்கி ஆசி பெற்றனர். (தாழ், தாள்)
7. கொடி மரத்தின் கயிறு ______________ விட்டது. (அறுந்து, அருந்து)
8. சிற்றரசர்கள் பேரரசர்களுக்கு ______________ செலுத்துவது வழக்கம். (திரை, திறை)
9. சீமானின் பணப்பெட்டியில் தங்கப் ______________ அடுக்கடுக்காக வைக்கப்பட்டிருந்தன. (பாளங்கள் பாலங்கள்)
10. ______________ கூண்டில் அடைத்து வளர்ப்பது அதன் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் செயலாகும். (கிளியைக், கிழியைக்)

**(ஊ) கோடிட்ட இடங்களிலே பொருத்தமான சொற்களைப் பாவித்துக் கீழே தரப்பட்ட வாக்கியங்களைப் பூர்த்தி செய்க:** (புள்ளிகள்: 10)

1. இரவில் வானத்தில் ஒளிர்விடும் ____________________ பலவற்றைப் பார்த்து மகிழலாம்
2. வகுப்புகளில் __________________ பொருள்களை அவர்களுடைய அனுமதியின்றி நாம் தொடக்கூடாது.
3. பிள்ளைகள் __________________ மனம் கோணாமல் நடந்து கொள்ள வேண்டும்.
4. ஒரு சிலர் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி அதிலிருந்து ____________________ தவிக்கிறார்கள்.
5. ஒவ்வொரு நாளும் காலையில் நான் பள்ளிக்குச் செல்லும்போது __________________ என் தம்பியும் வருவான்.
6. தமிழ்ப்பள்ளிகளில் மாணவர் ____________________ அதிகரித்து வருகிறது.
7. ஒரு இரவும் ஒரு _______________________ சேர்ந்தது ஒரு நாளாகும்.
8. வள்ளல் தன்னிடமிருந்த __________________ எல்லாவற்றையும் ஏழைகளுக்கு வாரிக் கொடுத்தான்.
9. திருக்குறள் அறம் பொருள் இன்பம் பற்றிச் சொல்வதால் __________________________ நூல் எனப் போற்றப்படுகிறது.
10. மழை பெய்யும்பொழுது சில வேளைகளில் __________________ இடி கேட்கும்.

**(எ) கீழே தரப்பட்ட சொற்களுக்கு அவற்றின் பொருள் விளங்கும்படி வாக்கியங்கள் எழுதுக.** (புள்ளிகள்: 20)

**குறிப்பு : ஐந்து (5) சொற்களுக்குக் குறையாமல் வசனம் அமைய வேண்டும்**

1. புதுவருடம்:________________________________________

________________________________________________

2. பூர்வீகம்:__________________________________________

________________________________________________

3. வங்கி:____________________________________________

________________________________________________

4. திரைப்படம்:_______________________________________

________________________________________________

5. காட்டுத்தீ:_________________________________________

________________________________________________

6. மலர்மாலை:________________________________________

________________________________________________

7. உதைபந்து:________________________________________

________________________________________________

8. வைத்தியர்:_________________________________________

_____________________________________________

9. பழமொழிகள்:______________________________________

________________________________________________

10. தேசியகீதம்:_______________________________________

________________________________________________

**(ஏ) கீழே தரப்பட்ட கவிதையைப் கருத்தூன்றிப் படித்த பின்னர் கீழேயுள்ள கேள்விகளுக்குத் தகுந்த விடைகளைத் தருக.** (புள்ளிகள்: 10)

நாடு எங்கள் நாடு
நாம் வசிக்கும் நாடு
வீடு காடு தோட்டம்
விளங்கும் நல்ல நாடு

கடல் சூழ்ந்த நாடு
கல்வி நிறைந்த நாடு
உடல் வருத்தி உழைக்கும்
உயர்ந்த மக்கள் நாடு

அருவி பாயும் நாடு
அழகு மலை நாடு
குருவி கொக்குக் கிளிகள்
குக்க பறா நாடு

தங்கச் சுரங்க நாடு
தானியம் விளை நாடு
கங்கரு பாய்ந்தோடும்
கரும்பு வளர் நாடு

அன்பு வளர் நாடு
அவுஸ் திரேலிய நாடு
இன்பம் பொங்கும் நாடு
எவர்க்கும் நல்ல நாடு

நா.மகேசன்

**<u>கேள்விகள்:</u>**

1) இந்தக் கவிதை எந்த நாட்டைப் பற்றிக் கூறுகிறது? (1 புள்ளி)

________________________________________

2) கவிதையிலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வகைக்கும் உதாரணம் ஒன்று தருக. (5 புள்ளிகள்)

| வகை | உதாரணம் |
|---|---|
| விலங்கு | |
| பறவை | |
| பயிர் | |
| சுரங்கம் | |
| இயற்கை வளம் | |

3) இந்த நாட்டில் வாழும் மக்களைப் பற்றி நீர் அறிந்து கொண்டதை உமது சொற்களில் எழுதுக. (4 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

**(ஐ) கீழே தரப்பட்ட சொற்களிலிருந்து பொருத்தமான சொற்களாற் பந்தியில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.** (புள்ளிகள்: 15)

## அழியாத செல்வம்

மக்கள் பெற வேண்டிய செல்வங்களில் (1) ________________ கல்விச் செல்வம். பணம், பொன், பொருள் முதலிய செல்வங்கள் எளிதில் (2) ________________. ஆனால், கல்விச் செல்வம் மட்டும் நிலையானது. எனவேதான் மக்கள் அரும்பாடுபட்டுக் (3) ________________ கற்க விழைகின்றனர்.

**'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை'** என்று (4) ________________ கூறினார்.

அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே என்பது அக்குறளின் விளக்கமாகும் கல்வி கற்பதற்கு (5) ________________ பருவமே ஏற்ற காலமாகும். அதனால்தான் 'இளமையில் கல்' என்று ஔவையார் கூறியிருக்கிறார்.
அப்பருவத்தில் கற்கும் கல்வியே (6) ________________ போல் மனதில் நன்கு பதியும்.
கல்வியைக் கற்கும் போது முதலில் அது கடினமாகத் தோன்றலாம். அதைக்கண்டு மாணவர்கள் மலைக்கக் கூடாது. முயற்சியுடன் படித்து கல்வி (7) ________________ உச்சியை அடைய வேண்டும். கல்விச் செல்வம் உடைய ஒருவன் தான் ஏனைய (8) ________________ எளிதில் பெற முடியும். எதிர்காலத்தில் அவன் பெயரும் புகழும் பெற்று விளங்குவதற்கு கல்விச்செல்வம் துணை புரியும்.
மாணவர்களாகிய நீங்கள் நாட்டுக்கும் வீட்டுக்கும் (9) ________________ தேடித் தர வேண்டும். அதற்கு தேவையான கல்விச் செல்வத்தை பெற அயராது (10) ________________ உங்கள் கடமையாகும்.

| | | | |
|---|---|---|---|
| வள்ளுவர் | அழியக்கூடியவை | இளமைப் | பெருமை |
| பசுமரத்தாணி | புகழ் | செல்வங்களை | உழைப்பது |
| முதன்மையான | கல்வியை | மகிழ்ச்சி | ஏணியின் |

(ஓ) **குறைந்தது 50 சொற்களில் கீழே தரப்பட்ட தலைப்பைப் பற்றி எழுதுக.** (புள்ளிகள்: 15)

தமிழ் வளர்த்த பெரியார்